# தீர்க்கதரிசனத்தின் தேவகதைகள்


## பாடம் 14: காயீனின் முத்திரை

**ஆதியாகமம் 4:1-15**

### நடந்த கதை . . .

ஆதாம் ஏவாளின் முதல் இரண்டு குமாரர்களில், அவர்கள் குணநலன்களும் நடத்தையும் முற்றிலும் மாறுபட்டிருந்தன. விவசாயம் செய்து, கட்டடங்கட்டுவதில் காயீன் ஆர்வங்காட்டினான்; காடுமலை சுற்றி, ஆடுமேய்ப்பது ஆபேலுக்குப் பிடித்திருந்தது.

ஆதாமும் ஏவாளும் கீழ்ப்படியாததால் இந்தப் புதிய பூமிக்குள் பாவம் நுழைந்தபிறகு, ஒரு பலிமுறையை தேவன் ஏற்படுத்தியிருந்தார்; இரத்தஞ்சிந்துதலில்லாமல் பாவமன்னிப்பில்லை என்று அவர்களுக்கு விளக்கியும் இருந்தார். எபிரெயர் 9:22. இயேசு ஒரு மனிதனாக வந்து, இந்த உலகின் பாவங்களுக்காக இயேசு அடிக்கப்படுவார் என்பதற்குப் பலிகள் அடையாளமாக இருந்ததாகவும் அவர்களிடம் சொன்னார். தன் பாவங்களுக்குப் பலியாக ஆபேல் ஓர் ஆட்டுக்குட்டியைக் கொண்டுவந்தான். ஆனால் காயீன், தேவனுடைய கட்டளைக்கு அப்படியே கீழ்ப்படிய வேண்டிய அவசியமில்லையென்று நினைத்தான். ‘பலிமுறை குழப்பமானது’ என்றும், ‘ஏதாவது காணிக்கை படைத்து தேவனைத் தொழலாம்’ என்றும் நினைத்தான். வயலில் தன் கிரியைகளின் பலனைக் காணிக்கையாகக் கொண்டுவந்தான். பரலோகத்திலிருந்து அக்கினி வந்து ஆபேலின் பலியைப் பட்சித்தது; காயீனின் பலி அப்படியே இருந்தது; காயீனுக்குப் பொறாமையும் கோபமும் எழுந்தது. தாழ்மையுடன் கீழ்ப்படியுமாறு ஆண்டவர் காயீனிடம் வேண்டினார்; ஆனால் அவன் தன் கலகத்தை விடவில்லை. ஆபேலும் தன் அண்ணனிடம் அன்பாகச் சொன்னான்; ஆனால் காயீனுக்குப் கடுங்கோபம் மூண்டது. அவன் தன் சுயநிலைக்கு வரும்முன், ஆபேலைக் கொன்றுவிட்டான். காயீனைத் தேவன் சபித்தார்; தனக்குக் கொடுக்கப்பட்ட தண்டனையைத் தன்னால் தாங்கமுடியாது என்று காயீன் முறையிட்டான்; காயீன் செய்த முதல் கொலைக்காக வருங்காலச் சந்ததியார் அவனைக் கொலைசெய்யாமல் இருக்கும்படி காயீனுக்கு தேவன் ஒரு முத்திரையைப் போட்டார்.



கடைசி நாட்களிலும்கூட, நாம் எப்படி, எப்போது ஆராதிக்க வேண்டும் என்பதுகுறித்து கிறிஸ்தவர்கள்மத்தியில் ஒரு யுத்தம் எழும்புமென்று வெளிப்படுத்தல் கூறுகிறது. தேவ முத்திரையைத் தரிக்கப்போகிறவர் யார்? மிருக முத்திரையைத் தரிக்கப்போகிறவர் யார்? இது சீக்கிரமே தெரிந்துவிடும்.

# ஆராய்ச்சிப் பகுதி

கொடுக்கப்பட்டுள்ள வேதாகம வசனங்களை வாசித்து, கோடிட்ட இடங்களை நிரப்புக.

**1. கடைசி ஏழு வாதைகளின்போது யார் பாதுகாக்கப்படுவார்கள்?**

**வெளிப்படுத்தல் 7:3.** *நாம் நமது தேவனுடைய ஊழியக்காரரின் ________________ ________________ தீருமளவும் பூமியையும் சமுத்திரத்தையும் மரங்களையும் சேதப்படுத்தாதிருங்கள் என்று மகா சத்தமிட்டுக் கூப்பிட்டான்.*

**குறிப்பு:** தங்கள் நெற்றிகளில் தேவனுடைய முத்திரையைப் பெறுகிறவர்கள் வாதைகளின்போது பாதுகாக்கப்படுவார்கள். (சங் 91:7–11).

**2. நீதிமான்களின் நெற்றிகளில் போடப்படும் இந்த ‘முத்திரை’ என்ன?**

**ஏசாயா 8:16.** *சாட்சி ஆகமத்தைக் கட்டி, என் சீஷருக்குள்ளே ________________ முத்திரையிடு.*

**குறிப்பு:** தேவனுடைய முத்திரை அவருடைய பிரமாணத்தில் உள்ளது. முத்திரையில் மூன்று விஷயங்கள் அடங்கியிருக்கும் பெயர், பதவி, ஆட்சிப்பரப்பு. அதற்கு ஓர் உதாரணம், எஸ்றா 1:1. ‘பெர்சியாவின் ராஜாவாகிய கோரேஸ்’.

**3. பத்துக்கற்பனைகளில் எந்தக் கற்பனையில் முத்திரையின் அனைத்து அம்சங்களும் உள்ளன?**

**யாத்திராகமம் 20:11.** *________________ ஆறுநாளைக்குள்ளே வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் அவைகளிலுள்ள ________________ ________________.*

**குறிப்பு:** ஒரு முத்திரையின் மூன்று அம்சங்களும் நான்காம் கற்பனையில் மாத்திரம்தான் உள்ளன.

1) **‘கர்த்தர்’ அவருடைய பெயர்**
2) **‘வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் அவைகளிலுள்ள எல்லாவற்றையும்’ – அவரின் ஆட்சிப்பரப்பு.**
3) **‘உண்டாக்கி’ – சிருஷ்டிகரெனும் பதவி.**

**4. தேவன் தம்முடைய வல்லமையின் விசேஷித்த அடையாளமாக எதைக் கொடுத்திருக்கிறார்?**

**எசேக்கியேல் 20:12.** *நான் தங்களைப் பரிசுத்தம்பண்ணுகிற கர்த்தர் என்று அவர்கள் அறியும்படிக்கு, எனக்கும் அவர்களுக்கும் அடையாளமாய் இருப்பதற்கான என் ________________ அவர்களுக்குக் கட்டளையிட்டேன்.*

**எசேக்கியேல் 20:20.** *என் ஓய்வுநாட்களைப் ________________; நான் உங்கள் தேவனாகிய கர்த்தர் என்று நீங்கள் அறியும்படிக்கு அவைகள் எனக்கும் உங்களுக்கும் ________________ என்றேன்.*

**யாத்திராகமம் 31:13.** *நீங்கள் என் ஓய்வுநாட்களை ஆசரிக்கவேண்டும்; உங்களைப் பரிசுத்தப்படுத்துகிற கர்த்தர் நான் என்பதை நீங்கள் அறியும்படி, இது உங்கள் தலைமுறைதோறும் எனக்கும் உங்களுக்கும் ________________.*

**குறிப்பு:** சிருஷ்டிக்கவும் பரிசுத்தப்படுத்தவும் தமக்கிருக்கும் வல்லமையின் அடையாளமாக தேவன் ஓய்வுநாளைக் கொடுத்ததாக தெளிவாகச் சொல்லுகிறார். அதுதான் அவருடைய அதிகார முத்திரை அல்லது அடையாளம். வேதாகமம் முழுவதிலும் ‘அடையாளம்’, ‘முத்திரை’ ஆகிய வார்த்தைகள் மாற்றி மாற்றிப் பயன்படுத்தப்பட்டுள்ளன. (ஆதி 17:11ஐ ரோமர் 4:11 உடனும், வெளி 7:3 ஐ எசேக்கியேல் 9:4 உடனும் ஒப்பிடுக).





**5. அனைவரும் எதைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று வெளிப்படுத்தல் 13 இன் இரண்டாம் மிருகம் கட்டாயப்படுத்தியது?**

**வெளிப்படுத்தல் 13:16.** *அது சிறியோர், பெரியோர், ஐசுவரியவான்கள், தரித்திரர், சுயாதீனர், அடிமைகள், இவர்கள் யாவரும் தங்கள் தங்கள் வலதுகைகளிலாவது ________________ ஒரு ________________ பெறும்படிக்கும் செய்தது.*

**6. மிருகத்தின் முத்திரை என்ன?**

**குறிப்பு:** வெளி 13 இன் முதல் மிருகம் என்னவென்று பாடம் 13 இல் பார்த்தோம். அதன் அதிகாரம் அல்லது வல்லமையின் அடையாளம் என்ன? அதனுடைய அதிகாரத்தின் அடையாளத்தைக் கண்டுபிடிக்க பாப்புமார்க்கத்திடமே நேரடியாகக் கேட்போம். கத்தோலிக்க மதக்குறிப்புப் புத்தகத்தின் ஒரு பகுதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

**கேள்வி:** ஓய்வுநாள் எது?

**பதில்:** சனிக்கிழமைதான் ஓய்வுநாள்.

**கேள்வி:** நாம் ஏன் சனிக்கிழமைக்குப் பதில் ஞாயிற்றுக்கிழமையில் ஆசரிக்கிறோம்?

**பதில்:** சனிக்கிழமையின் பரிசுத்தத்தை ஞாயிற்றுக்கிழமைக்குக் கத்தோலிக்கச் சபை மாற்றியதால் நாம் சனிக்கிழமைக்குப் பதில் ஞாயிற்றுக்கிழமையில் ஆசரிக்கிறோம்.[1]

**மதக்குறிப்புப் புத்தகம் இன்னொன்றிலுள்ள ஒரு பகுதி:**

**கேள்வி:** பண்டிகைச் சட்டதிட்டங்களை மாற்றும் அதிகாரம் சபைக்கு உண்டென்று வேறெதாவது விதத்தில் நிரூபிக்கமுடியுமா?

**பதில்:** சபைக்கு அத்தகைய வல்லமை இல்லாதிருந்தால், இன்றைய கிறிஸ்தவ மதத்தினர் அனைவரும் கத்தோலிக்கச் சபையோடு ஒத்துப்போகும் ஒன்றைச் செய்திருக்க முடியாது – வாரத்தின் ஏழாம் நாளான சனிக்கிழமையின் ஓய்வு ஆசரிப்பை முதல் நாளான ஞாயிற்றுக்கிழமைக்கு மாற்றியிருக்க முடியாது; அப்படி மாற்றும்படி வேதாகமத்தில் எங்குமே சொல்லவில்லை’.[2]

எனவே, ஞாயிற்றுக்கிழமையை ஒரு பரிசுத்த நாளாக ஆக்கினதுதான் தன் வல்லமையின், அதிகாரத்தின் அடையாளம் என்று பாப்புமார்க்கம் சொல்கிறது; அந்த மாற்றத்தை கிட்டத்தட்ட கிறிஸ்தவ உலகம் முழுவதுமே ஏற்றுக்கொள்கிறது. (‘போப்புமார்க்கம் புரொட்டஸ்டண்டுகளிடம் கேட்கும் முக்கியக் கேள்வி’ என்கிற சிறப்பு ஆராய்ச்சி பகுதியை வாசிக்கவும்.)

1 Peter Geiermann, The Convert's Catechism of Catholic Doctrine (St. Louis: B. Herder Book Co., 1957 edition), p 50.

2 Stephen Keenan, A Doctrinal Catechism (New York: P.J. Kenedy & Sons, third American edition, revised, n.d.), p. 174.

**7. மிருகத்தின் முத்திரை அல்லது தேவனுடைய முத்திரை இரண்டில் எது வெளிப்புறமாகத் தெரியக்கூடியது?**

**எபிரெயர் 10:16.** *நான் என்னுடைய பிரமாணங்களை அவர்களுடைய இருதயங்களில் வைத்து, அவைகளை அவர்களுடைய ________________ எழுதுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.*

**பிரசங்கி 9:10.** *செய்யும்படி உன் ________________ நேரிடுகிறது எதுவோ, அதை உன் பெலத்தோடே செய்.*

**யாத்திராகமம் 13:9.** *கர்த்தரின் நியாயப்பிரமாணம் உன் வாயிலிருக்கும்படிக்கு, இது உன் கையிலே ஒரு ________________ உன் கண்களின் நடுவே ________________ இருக்கக்கடவது.*

**ஏசாயா 59:6,7.** *அவர்கள் கிரியைகள் அக்கிரமக்கிரியைகள்; கொடுமையான செய்கை அவர்கள் ________________இருக்கிறது. ... அவர்கள் ________________ அக்கிரமநினைவுகள்; பாழ்க்கடிப்பும் அழிவும் அவர்கள் வழிகளிலிருக்கிறது.*

**குறிப்பு:** மிருகத்தின் முத்திரையோ அல்லது தேவனுடைய முத்திரையோ வெளிப்படையாக கண்ணுக்குத் தெரிவதல்ல. நெற்றியானது மனதையும், கையானது செய்கையையும் சுட்டிக்காட்டுகின்றன. ‘கண்களுக்கு நடுவே’, ‘கையின்மேல்’ எனும் வார்த்தைகள் ஒருவரின் எண்ணங்களையும் செயல்களையும் சுட்டிக்காட்டும் அடையாளங்களாக வேதாகமத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளன. யாத் 13:16; உபாகமம் 6:8; 11:18. வேதாகமச் சத்தியத்திற்கு மாறாக, ஞாயிற்றுக்கிழமைதான் பரிசுத்த நாள் என்று ஒருவர் நம்பத் தீர்மானிக்கும்போது, மிருகத்தின் முத்திரையைத் தன் நெற்றியில் பெறுகிறார். தேவனுடைய ஓய்வுநாளில் வேலைசெய்வதாலோ, ஞாயிறு ஆசரிப்புச் சட்டத்தை வேலை, குடும்பம் போன்றவற்றுக்காகக் கைக்கொள்வதாலோ ஒருவர் தன் வலது

கரத்தில் மிருகத்தின் முத்திரையைப் பெறுகிறார். அந்த முத்திரை வெளியே தெரியாவிட்டாலும், யார் எந்த முத்திரையைப் பெற்றிருக்கிறாரென்பது தேவனுக்குத் தெரியும். 2தீமோ 2:19. ஒரு விதத்தில் தாங்கள் பெறும் முத்திரைக்குத் தாங்களே காரணமாக இருக்கிறார்கள். தேவனுடைய பரிசுத்த ஓய்வு நாளுக்கு மரியாதை செலுத்துபவர் தமக்குச் சொந்தமானவரென்று தேவன் முத்திரையிடுவார்; மிருகத்தின் பொய்யான ஓய்வுநாளைக் கைக்கொள்கிறவர் மிருகத்திற்குச் சொந்தமானவரென்று தேவன் முத்திரையிடுவார்.

### 8. எது நம்மை இயேசுவின் ஊழியக்காரர்களென்று காட்டுமென்று இயேசு கூறுகிறார்?

**ரோமர் 6:16.** *எதற்குக் கீழ்ப்படியும்படி உங்களை அடிமைகளாக ஒப்புக்கொடுக்கிறீர்களோ, அதற்கே ________________ அடிமைகளாய் இருக்கிறீர்களென்று அறியீர்களா?*

**யோவான் 14:15.** *நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால் என் கற்பனைகளைக் ________________.*

### 9. இப்போது யாராவது மிருகத்தின் முத்திரையைப் பெற்றிருக்கிறார்களா?

**வெளிப்படுத்தல் 13:17.** *அந்த மிருகத்தின் முத்திரையையாவது அதின் நாமத்தையாவது அதின் நாமத்தின் இலக்கத்தையாவது தரித்துக்கொள்ளுகிறவன் தவிர வேறொருவனும் ____________ ____________ கூடாதபடிக்கும் செய்தது.*

**குறிப்பு:** இப்போது முத்திரை யாருக்கும் போடப்படவில்லை. ஆனால், அது கட்டாயமாக்கப்படும்போது மிருகத்தின் முத்திரையைப் பெற்றவர்தான் விற்கவோ, வாங்கவோ முடியும். அந்தச் சமயத்தில், தேவனுடைய பரிசுத்த ஓய்வுநாளைக் கைக்கொள்கிறவர்கள் தங்கள் உயிரையும் பணயம்வைத்து அதில் உண்மையாயிருக்கவேண்டும். வெளி 13:15. அவருடைய பரிசுத்த நாளைத் தீட்டுப்படுத்தவும், தேவகற்பனைக்கு மேலாக மனிதச் சட்டங்களுக்குக் கீழ்ப்படிய அதிகாரப்பூர்வமாகத் தங்கள் ஆதரவைத் தெரிவிப்பவர்களும் அந்திக்கிறிஸ்துவைச் சேர்ந்தவர்களென முத்திரிக்கப்படுவார்கள். இயேசுவுக்கும் அவருடைய பரிசுத்த நாளுக்கும் உண்மையாயிருப்பவர்கள் இயேசுவின் மகிமையான முத்திரையைத் தரிப்பார்கள்; தங்களை என்றென்றும் அவருக்குச் சொந்தமாக்குவார்கள். இதில் எந்தப் பக்கமும் சாயாமல் இருக்க முயற்சிப்பவர்கள் அந்திக்கிறிஸ்துவின் சொந்தக்காரர்களாக எண்ணப்படுவார்கள். மத்தேயு 12:30.

### 10. அந்திக்கிறிஸ்துவின் வல்லமை வேறு என்ன இரண்டு காரியங்களையும் மாற்ற முயலும்?

**தானியேல் 7:25.** ____________ ____________ *மாற்ற நினைப்பான்.*

**குறிப்பு:** அந்திக்கிறிஸ்துவின் வல்லமைபற்றி தானியேல் 7 இல் உள்ளது. அந்த வல்லமை பிரமாணங்களையும் காலங்களையும் மாற்ற நினைக்குமென்று சொல்லப்பட்டுள்ளது.

**பின்வரும் விதங்களில் பாப்பு மார்க்கம் தேவ கட்டளைகளை மாற்றமுயன்றது.**

1. சிலைகளை வணங்கக்கூடாதென்கிற இரண்டாம் கற்பனையை நீக்கியது; பத்தாம் கற்பனையை இரண்டு கற்பனைகளாகப் பிரித்தது.
2. ஓய்வுநாள் எந்த நாள் என்பது தெரியாதபடிக்கு, 94 வார்த்தைகளிலிருந்து 8 வார்த்தைகளாக நான்காம் கற்பனையைக் குறைத்தது.

**தேவனுடைய காலங்களை பாப்புமார்க்கம் பின்வரும் விதத்தில் மாற்றநினைத்தது.**

1. வாரத்தின் ஏழாம் நாளுக்குப் பதிலாக முதலாம் நாளை ஓய்வுநாளாக மக்கள் கடைப்பிடிக்குமாறு போதித்தது.
2. வேதாகமம் சொல்வதின்படி சூரிய அஸ்தமனத்தில் ஒரு நாள் தொடங்குவதை மாற்றி, அஞ்ஞான ரோம முறைப்படி நடுராத்திரியில் தொடங்கினார்கள். ஓய்வுநாளாக தேவன் நியமித்த காலக்கட்டமானது வெள்ளிக்கிழமை சூரிய அஸ்தமனத்திலிருந்து சனிக்கிழமை சூரிய அஸ்தமனம் வரைக்கும் ஆகும். லேவி 23:32. தேவனுடைய பரிசுத்த பிரமாணத்தையோ, காலங்களையோ மாற்றும் துணிவு மனிதர் எவருக்கும் இருக்கக்கூடாது. மத்தேயு 5:18.

### 11. முற்கால தம் ஆசாரியர்களிடம் அல்லது போதகர்களிடம் என்ன குறை காணப்பட்டதாக தேவன் கூறுகிறார்?

**மல்கியா 2:8,9.** *நீங்களோ வழியைவிட்டு விலகி, அநேகரை ____________ இடறப்பண்ணினீர்கள் ... நீங்கள் என் வழிகளைக் கைக்கொள்ளாமல் வேதத்தைக்குறித்துப் ____________ பண்ணினீர்கள்.*

**ஓசியா 4:6.** *என் ஜனங்கள் அறிவில்லாமையினால் சங்காரமாகிறார்கள்; நீ*



*அறிவை வெறுத்தாய், ஆகையால் நீ என் ஆசாரியனாயிராதபடிக்கு நானும் உன்னை வெறுத்துவிடுவேன்; நீ உன் தேவனுடைய ____________ ____________, ஆகையால் நானும் உன் பிள்ளைகளை மறந்துவிடுவேன்.*

**குறிப்பு:** எட்டு அல்லது ஒன்பது கற்பனைகளைக் கைக்கொண்டு, ஓய்வுநாளைக் கைக்கொள்ளாதிருக்கும்படி மக்களைத் தடுமாறச்செய்யும் போதகர்களை நினைத்து தேவன் வேதனைப்படுகிறார். ஞாயிற்றுக்கிழமை பரிசுத்த நாளென்பதற்கு வேதாகம ஆதாரம் எதுவுமில்லையென்று கிட்டத்தட்ட அனைத்துச் சபைகளின் குறிப்புகளிலும் காணமுடிகிறது. வேதாகம ஓய்வு நாளைத் தள்ளிவிட்டதற்காக புரொட்டஸ்டண்ட் கிறிஸ்தவர்களும் தேவனுடைய நியாயாசனத்திற்குமுன் குற்றவாளிகளாக நிற்பது வருத்தகரமானது. தேவன் தம்முடைய சிருஷ்டிப்பின் வல்லமைக்கும், இரட்சித்துப் பரிசுத்தப்படுத்தும் தம்முடைய வல்லமைக்கும் ஓர் அடையாளமாகத்தான் ஓய்வுநாளைக் கொடுத்தார். யாத் 31:17; எசேக்கியேல் 20:12. பரலோகத்தின் தேவனை முற்றிலுமாகப் பிரதிபலிக்கும் இந்தப் பரிசுத்த அடையாளத்தை அவமதிக்கும் துணிவு எந்த மனிதனுக்காவது வரலாமா?

### 12. தேவபிரமாணத்தின் மேன்மையான காரியங்களை முற்கால தேவதலைவர்கள் எவ்வாறு கருதினார்கள்?

**ஓசியா 8:12.** *என் வேதத்தின் மகத்துவங்களை அவர்களுக்கு எழுதிக்கொடுத்தேன்; அவைகளை ____________ எண்ணினார்கள்.*

**குறிப்பு:** காலங்கள் மாறவில்லை. தேவன் தம்முடைய உன்னத அடையாளமான ஓய்வுநாளை தம்முடைய கற்பனைகளிலேயே மையத்தில் வைத்து, 'நினைப்பாயாக' என்று அந்தக் கற்பனையை ஆரம்பிக்கிறார். ஆனால், அவருடைய ஏழாம்நாள் ஓய்வுநாளைக் கைக்கொள்வது ஒரு விசித்திரமான செயலென்று அநேகர் நினைக்கிறார்கள்.

### 13. தேவன் தம்முடைய பரிசுத்த ஓய்வுநாள் குறித்து முக்கியமாக எதற்காகக் கடிந்துகொண்டார்?

**எசேக்கியேல் 22:8.** *நீ என் பரிசுத்த வஸ்துக்களை ____________, என் ஓய்வுநாட்களைப் பரிசுத்தக்குலைச்சலாக்கினாய்.*

**எசேக்கியேல் 22:26.** *அதின் ஆசாரியர்கள் என் வேதத்துக்கு அநியாயஞ்செய்து, என் பரிசுத்த வஸ்துக்களைப் பரிசுத்தக் குலைச்சலாக்குகிறார்கள்; பரிசுத்தமுள்ளதற்கும் பரிசுத்தமில்லாததற்கும் ____________ ____________, என் ஓய்வுநாட்களுக்குத் தங்கள் கண்களை ____________; அவர்கள்நடுவிலே நான் கனஈனம் பண்ணப்படுகிறேன்.*

**குறிப்பு:** ஓய்வுநாள் முக்கியமல்லவென்றும், உண்மையில்லாதவற்றை 'ஆண்டவர் சொல்கிறார்' என்றும் சொல்லுகிற மதத்தலைவர்களை தேவன் கடிந்துகொள்கிறார்.

### 14. தலைவர்கள் என்ன பாவத்தைப் புறக்கணிக்கவேண்டுமென்று தேவன் கட்டளையிட்டுள்ளார்?

**ஏசாயா 58:1,13,14.** *சத்தமிட்டுக் கூப்பிடு; அடக்கிக்கொள்ளாதே; எக்காளத்தைப்போல் உன் சத்தத்தை உயர்த்தி, என் ஜனத்துக்கு அவர்கள் மீறுதலை ... ____________ ... என் பரிசுத்தநாளாகிய ஓய்வு நாளிலே உனக்கு ____________ செய்யாதபடி, உன் காலை விலக்கி, ... ஓய்வுநாளை ____________ நாளென்றும், கர்த்தருடைய பரிசுத்தநாளை மகிமையுள்ள நாளென்றும் சொல்லி, அதை மகிமையாக எண்ணுவாயானால் ... கர்த்தரில் மனமகிழ்ச்சியாயிருப்பாய்.*

**குறிப்பு:** ஓய்வுநாள் மீறுதல் பாவமென்று சொல்லவும், அவருடைய ஓய்வுநாளைப் பரிசுத்தமாக ஆசரிக்கும்படி அவருடைய மக்களிடம் வலியுறுத்தவும் ஆவிக்குரிய தலைவர்களுக்கு தேவன் கட்டளையிடுகிறார்.

### 15. இயேசுவை ஏற்றுக்கொண்டு, அவரை முற்றிலும் பின்பற்றத் தீர்மானிக்கும்போது என்ன நிகழுகிறது?

**மத்தேயு 11:29.** *நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன்; என் நுகத்தை உங்கள்மேல் ஏற்றுக்கொண்டு, என்னிடத்தில் கற்றுக்கொள்ளுங்கள்; அப்பொழுது, உங்கள் ____________ ____________ கிடைக்கும்.*



**குறிப்பு:** மனம்மாறியதும் உங்கள் உள்ளத்தில் மகிமையான இளைப்பாறுதலும் சமாதானமும் குடிகொள்கின்றன. ஓய்வநாள் என்றால் 'இளைப்பாறுதல்'; புதுப்பிறப்பால் கிடைக்கும் இளைப்பாறுதலுக்கும் சமாதானத்துக்கும் அது அடையாளமாக இருக்கிறது. எபிரெயர் 4:1–10. மெய்யாகவே மறுபடியும் பிறந்தவர்கள், அந்த இளைப்பாறுதலைப் பெற்றதின் அடையாளமாக ஓய்வுநாளைக் கைக்கொள்வார்கள். (வச 4,9,10). மனந்திருந்தி, தேவனுடைய ஓய்வுநாளைப் பரிசுத்தமாகவும் கைக்கொள்வதால் கிடைக்கும் சந்தோஷத்திற்கு எதுவும் நிகராகாது.

## நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்?

மிருகத்தின் முத்திரை 'வேண்டாம்' என்று சொல்வதற்கு, தேவமுத்திரைக்கு 'ஆம்' என்று சொல்லவேண்டும். உங்கள் பதிலுக்காக இயேசு உங்கள் இதயக் கதவண்டைக் காத்துநிற்கிறார். இயேசுவை நீங்கள் உங்கள் சிருஷ்டிகராகவும் இரட்சகராகவும் ஏற்றுக்கொண்டதற்கு அடையாளமாக, அவருடைய ஓய்வுநாளை ஆசரிக்க ஆயத்தமாயிருக்கிறீர்களா?

**பதில்:** ________________________

## துணைப்பகுதி

***மேலும் படிப்பதற்கான கூடுதல் தகவல்கள் இந்தப் பகுதியில் உள்ளன.***

### பாப்புமார்க்கம் புரொட்டஸ்டன்ட் கிறிஸ்தவர்களிடம் கேட்கும் முக்கியக்கேள்வி

பாப்புமார்க்கத்தினரிடம் புரொட்டஸ்டண்ட் கிறிஸ்தவர்கள், "எவ்வளவு தைரியம் இருந்தால் தேவனுடைய பிரமாணத்தை நீங்கள் மாற்றலாம்?" என்று கேட்டபோது, அவர்களிடம் கத்தோலிக்கச் சபை ஒரு கேள்வியைக் கேட்டது.

**அந்தக் கேள்வி இதோ:** சனிக்கிழமை என்பது யூதமுறையின் ஓய்வுநாள்; ஆனால், அந்த ஓய்வுநாள் ஞாயிற்றுக்கிழமைக்கு மாற்றப்பட்டது என்று நீங்கள் சொல்கிறீர்கள். மாற்றினது யார்? சர்வவல்ல தேவனின் கட்டளையை மாற்றும் அதிகாரம் யாருக்கு உண்டு? 'ஏழாம்நாளில் பரிசுத்தமாக ஆசரிப்பாயாக' என்று தேவன் சொல்லியிருக்கும்போது, 'ஏழாம்நாளில் நீங்கள் வேலை செய்யலாம், வியாபாரங்களில் ஈடுபடலாம். அதற்குப்பதிலாக முதலாம் நாளை பரிசுத்தமாக ஆசரிக்கலாம்' என்று சொல்லும் துணிவு யாருக்குண்டு?"

### இது ஒரு மிகமுக்கியமான கேள்வி; என்ன பதில் சொல்வீர்கள்?

நீங்கள் ஒரு புரொட்டஸ்டண்ட் கிறிஸ்தவர்; வேதாகமத்தை, வேதாகமத்தை மாத்திரமே நீங்கள் பின்பற்றுவதாகக் கூறுகிறீர்கள்; ஆனாலும், பரிசுத்த நாளாக ஒரு நாளை ஆசரிக்கவேண்டும் என்கிற விஷயத்தில், வேதாகமம் சொல்கிற தெளிவான கட்டளைக்குக் கீழ்ப்படிகிறீர்களா? வேதாகமம் சொல்கிற நாளுக்குப் பதில் வேறொரு நாளை ஆசரிக்கிறீர்களா? நீங்கள் நம்புகிற பத்துக் கற்பனைகளில், 'ஏழாம்நாளைப் பரிசுத்தமாக ஆசரிக்க நினைப்பாயாக' என்கிற கட்டளையும் ஒன்று. ஒன்பது கட்டளைகளுக்கு இன்றும் கீழ்ப்படியத் தீர்மானித்திருக்கும் உங்களுக்கு நான்காம் கற்பனையை மீறும் அதிகாரத்தைத் தந்தது யார்? நீங்கள் உங்கள் நியதிகளுக்குக் கட்டுப்பட்டு நடப்பவர்கள் என்றால், வேதாகமத்தை வேதாகமத்தைமாத்திரமே நீங்கள் பின்பற்றுகிறவர்கள் என்றால், இந்த நான்காம் கற்பனை புதிய ஏற்பாட்டில் எங்காவது மாற்றப்பட்டிருக்கிறதாவென்று நீங்கள் காண்பிக்கவேண்டும்.

1 Library of Christian Doctrine: Why Don't You Keep Holy the Sabbath-Day? (London: Burns and Oates, Ltd.), pp. 3, 4.

**LMN Kakkum Karangal**
35, Chethupakkam
Thamarai Pakkam Post,
Thiruvallur, Chennai 601103
Tel: +91-9444841268
lmnkakkumkarangal@gmail.com